Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

Reg. No. KKI/63/2015-2017

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்; கர்த்தரின் ஊழியக்காரரே, துதியுங்கள் சங்.135:1 டிசம்பர் 2017 No.12

மன்னிப்பும் ஜெபத்தில் வல்லமையும்

Forgiveness and power in Prayer

Rich Carmicheal

ஆரம்பத்தில் மிகச் சிறிய குழந்தை கூட ஜெபிக்கக் கூடியதாக ஜெபம் எளிதானதாயிருந்தாலும் அதே வேளையில் மனிதன் செய்யக்கூடியதில் மிக உயரியதும் மிக பரிசுத்தமான ஒன்றாகவும் ஜெபம் காணப்படுகிறது. ஜெபம் காணப்படாத மிகப்மிகப் பரிசுத்தமான தேவனோடுள்ள உறவாகும். உண்மையான மார்க்கத்தின் சாரமும், அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் வாய்க்காலும், ஜீவனுக்கும் வல்லமைக்கும் இரகசியமுமாயிருப்பது ஜெபமே. நமக்கு மட்டுமல்ல, பிறருக்கும் சபைக்கும், உலகத்திற்கும் தேவனைப் பற்றிக் கொண்டு, அவரது பெலனைப் பெறுவதற்குக் காரணமாயிருப்பது ஜெபம் என்பது உண்மை. வாக்குத்தத்தங்கள் பெற்றுக் கொள்ளப்படவும், அவரது ராஜ்யம் வரவும், தேவ மகிமை முற்றிலும் வெளிப்படவும் ஜெபம் ஏதுவாயிருக்கிறது.

பிறரை மன்னிப்பது

ஒரு இருதயத்திலிருந்து எழும்பும் ஜெபம் தேவனுடனோ, மனிதனிடமோ சீராயிராவிட்டால் அது பலன் பெறுவதில்லை.

ஜெபத்தைக் குறித்த ஒரு போதனையில் இயேசு: "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும் போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" என்றார் மாற்.11:25. அவர் கற்பித்த ஜெபத்திலும் "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" மாற்.6:12 என்றும் போதித்தார். மத்.6: 14-15 வசனங்களில் இது அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. (வாசிக்க)

C.H.ஸ்பர்ஜன் குறிப்பிடும்போது "இதிலிருந்து நகர வேண்டாம். மன்னிக்க மறுக்கிறவனுக்கு மன்னிப்பு மறுக்கப்படும். தேவன் தாமே மன்னியாமையை நமது இருதயங்களிலிருந்து விலக்குவாராக. கோபம் ஞானமுள்ளவர்களை எட்டிப்பார்க்க மட்டும் செய்யும், ஆனால் புத்தியீனரின் இருதயத்தில் அது பற்றி எரியும். எனவே கோபத்தைத் தவிர்த்து சுயாதீனமாகவும் முழு மனதோடும் மன்னிப்போம். நாம் மன்னிக்கப்பட்டதை நினைவு கூருவோம்" என்கிறார்.

மன்னிப்பைக் குறித்த உண்மைகள்

1.தேவன் மன்னிப்பை அளிப்பவர். தேவனுடைய ஒரு முக்கியமான பண்பு நம்மை மன்னிக்க ஆயத்தமாயிருப்பதாகும். "ஆண்டவரே நீர் வல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்" சங்.86: 5 . "தமது சுதந்திரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டு விடுவார்" மல்கியா 7:18-19.

அவர் நமது பாவங்களை நினைக்க மாட்டார். அவர் சர்வ ஞான முள்ளவர்; ஆகவே அவர் எதையும் மறப்பவரல்ல. அவர் எதை மறக்க வேண்டுமென்று எண்ணுகிறாரோ அதை மறந்து விடுவார். எனவே நமது பாவங்களை அவர் நினைக்க மாட்டார். எபி.8: 12, எரே.31:34. "நான் நானே . . . உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" ஏசா.43:25. "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" சங்.103:12.

இயேசுகிறிஸ்துவின் விலையேறிய இரத்தத்தால் பாவமன்னிப்பு சாத்தியமாகிறது:-

பாவ மன்னிப்பு என்பது விலையேறப் பெற்றது. அது இரத்தம் சிந்தப்படுவதால் மட்டுமே கூடியது எபி.9:22. மிகப் பெரிய நற்செய்தி என்னவெனில் கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தி தேவனுக்கு எதிராக பாவங்களையும் ஒருவருக்கொருவரிடையிலான பாவங்களையும் மன்னித்து விட்டார். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" எபே.1:7. "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1யோ.1: 7, எபே.2:14-16.

தேவ ஜனமாகிய நாம் அவரைப் போல் வாழவும், பிறருக்கு முழுமையாக மன்னிக்கவும் சிருஷ்டிக்கப்பட்டோம்:-

அந்தப்படி . . . . பழைய மனுஷனைக் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்". . . . .சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் . . . .கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" எபேசி.4:22-24; 30-32;

தேவ ஜனங்கள் மன்னிப்பைப் பெற்றது போல நாமும் பிறரை மன்னிக்க வேண்டும்:-

"ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" கொலோ.3: 12-13. மேலும் மத்.18:21-35 வசனங்களில் கூறப்பட்டுள்ள மன்னியாத வேலைக்காரனுடைய உவமையையும் படியுங்கள்.

பிறர் கடந்த காலங்களில் நமக்கு எதிராகச் செய்த குற்றங்களை ஒரு முழுமையான புதிய வெளிச்சத்தில் பாருங்கள்.

இதற்கு யோசேப்பின் வரலாறு ஒரு சிறந்த உதாரணம். யோசேப்பு அதிபதியானபோது தன் சகோதரருக்கு எதிராக எதையேனும் நடப்பித்து விடுவானோ? என்று அவர்கள் பயந்த போது, அவன் கூறியதென்ன? "பயப்படாதிருங்கள்; நான் தேவனா! நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ இப்பொழுது நடந்து வருகிற படியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக

2018-ம் வருடமும் தொடர்ந்து வருகையின் தூதன் பத்திரிகை தேவையானால், தயவு செய்து தபால் அட்டை அல்லது மொபைல் எண் 95432 21008, அல்லது SMS மூலமாக மொபைல் 94897 40295 வழியாக அலுவலகத்திற்கு தெரிவியுங்கள், நன்றி.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

". . . .உன் துக்க நாட்கள் முடிந்துபோம்" ஏசாயா *60:20.*

வாசகருக்கு என் அன்பு கடிதம்

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

When God blesses you financially, don't raise your standard of **living**; Raise your standard of **giving.**

"தேவன் உன்னை பொருளாதார ரீதியாக ஆசீர்வதிக்கும் போது உன் வாழ்க்கை தரத்தை உயர்த்தாதே, கொடுக்கிற தரத்தை உயர்த்து".

மேலே நீங்கள் வாசித்தது ஒரு மிஷனெரி பத்திரிகையில் அடியேன் வாசித்ததாகும். தேவனுடைய மனிதர் ஜாண் வெஸ்லி 30 டாலர் சம்பளம் வாங்கும்போது, அதில் 3 டாலர் தசமபாகம் கொடுத்து, 27 டாலரை தனக்காக செலவு செய்தாராம். அவருடைய சம்பளம் உயர்த்தப்பட்ட போதும், அதே 27 டாலரை தனது செலவுக்காகவும், மீதி முழுவதையும் தேவனுக்கு கொடுத்ததாகவும் வாசித்திருக்கிறேன். நீங்கள் எப்படி?

"தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை" *பிரசங்கி 5:15.*

வேறு ஒரு மிஷனெரி பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்த வாசகர் கடிதத்தை தேவ நாம மகிமைக்காக கீழே அச்சிடுகிறேன்:

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து நாடுகளில் எனது 45 வருட ஊழிய காலத்தில், ஆசீர்வாதம் பத்திரிகை எனக்கு எச்சரிப்பாய், சவாலாய், ஆறுதலாய் அமைந்தது. சகோ. ஸ்டான்லி, திருமதி லில்லியன் ஸ்டான்லி மற்றும் எண்ணற்றோரின் கட்டுரைகள் என்னை பெலப்படுத்தி, உற்சாகப்படுத்தி எனக்கு ஆசீர்வாதமாய் அமைந்துள்ளது. அநேக கிறிஸ்தவ பத்திரிகைகளில் இரண்டு பத்திரிகைகள் மிகச் சிறந்தவையாக இருக்கின்றன. ஒன்று "வருகையின் தூதன்" மற்றொன்று "ஆசீர்வாதம்". இரு பத்திரிகைகளும் வெளித் தோற்றம் எளிமையாக இருப்பினும் ஆத்துமாவுக்கு ஒரு நல்ல போஜனமாக இருக்கிறது. **– போதகர் ஞானதேசிங்கன், லண்டன்.**

டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையோடும் துதிக்கிறேன், மகிமைப்படுத்துகிறேன். "அப்பொழுது மரியாள்: என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் தம்முடைய **அடிமையின் தாழ்மையை** நோக்கிப்பார்த்தார்; . . . . .பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, **தாழ்மையானவர்களை** உயர்த்தினார். . . . என்றாள்". லூக்கா *1:46-55*

2018-ம் வருடமும் தொடர்ந்து வருகையின் தூதன் பத்திரிகை தேவையானால், தயவு செய்து தபால் அட்டை அல்லது மொபைல் என் 95432 21008, அல்லது SMS மூலமாக மொபைல் 94897 40295 வழியாக அலுவலகத்திற்கு தெரிவியுங்கள், நன்றி.

தேசத்திற்காக ஜெபிக்க 100 பேர்

இது ஒரு 'திட்டம்' அல்ல. என்னுடைய உள்ளத்தில் தேவ ஆவியானவர் தேசத்தைக் குறித்த பாரத்தைக் கிருபையாய் தருவதால், தேசத்தில் ஒரு மாறுதல் ஏற்பட, எழுப்புதல் ஏற்பட, அழியும் ஆத்துமாக்களுக்காக, தேசத்தை ஆளுகிறவர்களுக்காக ஜெபிக்கிற *100* பேர் தேவை.

நீங்கள் ஏற்கெனவே ஜெபிக்கிறீர்கள் என்பதை அறிவேன்; ஆயினும் *100* பேரை தெரிந்து, அவர்களுக்கு *3* மாதங்களுக்கு ஒரு முறை ஜெப அட்டைகளை (Prayer card) அனுப்பி, அவர்களை ஜெபிப்பதற்காக ஊக்கப்படுத்த விரும்புகிறேன். உங்களை உற்சாகப்படுத்துவதற்காக, பெயர் கொடுக்கும் **10 நபர்களுக்கு** ஒரு அழகிய பரிசை அனுப்புவேன். தயவுசெய்து முழங்காலில் நிற்க விரும்புகிறவர்கள் மாத்திரம் உடனடியாக உங்கள் பெயரை பதிவு செய்யுங்கள்.

70 வயது

இதுவும் ஒரு திட்டம் அல்ல. உண்மையை எழுதுவதானால், *70* வயதை தாண்டியும் ஊழியஞ் செய்கிறவர்களையும், ஊழியத்தை நேசித்து தாங்குகிற சிலரையும், வயதானவர்களையும், வியாதிப்பட்டோரையும், தனிமையாய் யாருடைய உதவியும் இல்லாமல் இருக்கிற சிலரை மனதில் நினைத்து அவர்களுக்காக அடியேன் விசேஷமாக ஜெபிக்க விரும்புகிறேன்.

90-ம் சங்கீதம் தேவனுடைய மனிதனாகிய மோசேயின் ஜெபம். "எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது *(70)* வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், **அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே**" *சங்.90:10.*

அப்படிப்பட்ட *70* வயதுக்கு மேற்பட்ட உங்களுக்காக அடியேன் ஜெபிக்க விரும்பினால், உங்கள் பதிவு எண், பெயர், இடம், தொலைபேசி/ மொபைல் எண் ஆகியவற்றை தயவு செய்து எனக்குத் தெரிவியுங்கள், நன்றி.

எழுப்புதலுக்காக இதய கதறல் - 2018

தேவ கிருபையால் *2018*-ம் ஆண்டு உபவாச ஜெபத்திற்காக கீழ்காணும் இடங்கள் ஒழுங்காகி இருக்கிறது. மீதியான இடங்களுக்காகவும் தயவு செய்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	27-01-2018 4-வது சனி	E.W.M. Prayer House, புதுக்கோட்டை
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, அரியா குப்பம், பாண்டிச்சேரி
ஏப்ரல்	14-04-2018 2-வது சனி	தமிழ் மெதடிஸ்ட் சபை, மும்பை
மே	19-05-2018 3-வது சனி	கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபை, தஞ்சாவூர்
ஜூன்		பெங்களூர்
ஜூலை	21-07-2018 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	18-08-2018 3-வ சனி	விசுவாச ஜெப சபை, கல்லக்குறிச்சி, விழுப்புரம்
செப்டம்பர்	15-09-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, தேனீ
அக்டோபர்	18-10-2018 3-வது வியாழன்	அந்தமான்
நவம்பர்		கேரளா
டிசம்பர்		

குறிப்பு: தயவு செய்து பாண்டிச்சேரி, மும்பை, பெங்களூர், அந்தமான், கேரளா ஆகிய வெளி மாநிலங்களுக்காக அதிகமாக ஜெபியுங்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்
VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

email:
Varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியப்பண்ணினார். ஆதலால் பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய் பேசினான் ஆதி.50:15-21. தேவ தன்மையை அவன் பெற்றிருந்தான். தன் கடந்த கால துன்பங்களை மறந்து சகோதரருக்கு மன்னிப்பை அளித்தான். நமது ஆண்டவர் சர்வ வல்லவர், நாம் அவரை நம்பலாம். ஏனெனில் அவரை நம்புகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறுகிறது ரோ.8:28.

எனவே இதன் மூலம் நீங்கள் மன்னியாத உங்கள் கசப்பிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவோடு ஆழமான ஐக்கியம் கொண்டு ஜெப வாழ்வில் வளருவீர்களென நம்புகிறோம்.

ஜெபமும் உபவாசமும்

Prayer and fasting

Andrew Murray

வேதபாடபகுதி: மத்.17:19-21

இயேசு பொல்லாத ஆவியைத் துரத்தியதைக் கண்டபோது, தாங்கள் ஏன் அதைத் துரத்த முடியவில்லை என்று சீஷர்கள் கேட்டனர். ஏற்கெனவே அவர் சீஷர்களுக்கு, "சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் வல்லமையும் அதிகாரமும் கொடுத்திருந்தார்" லூக்.9:1. அவர்கள் அதின்படி செய்து சந்தோஷத்தோடு திரும்பி வந்து பிசாசுகள் அவர்களுக்கு கீழ்ப்படிந்ததை குறிப்பிட்டனர். ஆயினும் இப்போது அவர் மலையிலிருந்தபோது அவர்களுக்கு மிகப்பெரிய தோல்வி ஏற்பட்டது. தேவ சித்தமில்லாமலோ அந்த பிசாசின் தன்மையோ விடுதலைக்குத் தடையாயிருக்கவில்லை. இயேசு கிறிஸ்து கட்டளையிட்டதும் அசுத்த ஆவி போய்விட்டது. ஆனால் ஏன் சீஷர்களால் முடியவில்லை? அவர்கள் விரும்பினார்கள், முயற்சித்தார்கள். தங்கள் எஜமானின் பெயரைக் குறிப்பிட்டு அந்த ஆவியை வெளியே போகும்படி சொன்னார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வீணாயிற்று. திரள் கூட்டமான மக்கள் மத்தியில் அவர்கள் வெட்கமடைந்தார்கள் ஏன்?

கிறிஸ்துவின் பதில், 'உங்கள் அவிசுவாசமேதான்'. இயேசுவின் வெற்றிக்கும், சீஷரின் தோல்விக்கும் காரணம் அவரிடம் காணப்பட்ட விசேஷித்த வல்லமை அவர்களிடமில்லாதிருந்ததாலல்ல. விசுவாசத்தின் வல்லமை தேவ ராஜ்யத்திலும், அந்தகாரலோகத்திலும் மேலானது என்பதை இயேசு அடிக்கடி போதித்திருந்தார். எனவே ஆவிக்குரிய உலகத்தில் விசுவாசக் குறைவுதான் தோல்விக்கு ஒரே காரணம். விசுவாசம் என்ற ஒரே நிபந்தனையில் அனைத்து தெய்வீக வல்லமையும் மனிதனுக்குள் பிரவேசித்து அவன் மூலம் கிரியை செய்ய முடியும். இது காணப்படாத தேவனுடைய எளிதில் விட்டுக்கொடுக்கும் தன்மை. மனிதனுடைய சித்தம் அர்ப்பணிக்கப்பட்டு, தேவசித்தத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது. பிசாசுகளை துரத்தும்படி அவர்கள் பெற்றுக்கொண்ட வல்லமை, அதை நிரந்தரமான ஈவாக சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. கிறிஸ்துவிலுள்ள இந்த வல்லமை பெற்றுக் கொள்ளப்பட்டு, பாதுகாக்கப்பட்டு விசுவாசத்தினால் மட்டும் பயன்படுத்தப்பட்டு அவரிலுள்ள விசுவாசத்தின் மூலம் வாழுவதாயிருக்க வேண்டும். ஆவிக்குரிய உலகில் இயேசுவே ஆண்டவரும் வெற்றி வீரரும் என்ற முழு விசுவாசத்துடன் இருந்தால், அவரில் முழு விசுவாச முடையவர்களாகவும், அதன் மூலம் வெற்றி பெறுகிறவர்களாகவும் இருந்திருக்க முடியும்.

ஆவிக்குரிய வாழ்வின் நிலை

இந்த விசுவாசக்குறைவுக்கு ஒரு காரணமுமுண்டு. ஏன் என்று அவர்கள் கேட்குமுன்னாலேயே 'இந்த வகையான பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி வேறெந்த வகையிலும் போகாது' என்றார். விசுவாசம் எளிமையானது. ஆவிக்குரிய வாழ்வில் அதிகப் பயிற்சி மூலம் நமது ஆவி தன்னை தேவனுடைய ஆவிக்கு முற்றிலும் ஒப்படைத்து விடுகிறது. அதனால் விசுவாசம் அதன் உயரிய நிலைக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த விசுவாசம் நமது ஆவிக்குரிய வாழ்வின் நிலையை முற்றிலும் சார்ந்தது. அது உறுதியாகவும் முழுமையான ஆரோக்கியத்துடனும் இருந்தால், தேவ ஆவியானவர் முழுமையாக அசைவாடும் போது விசுவாசத்தின் வலிமை பெரிய காரியங்களைச் செய்யும். எனவே தான் இயேசு இவ்வகையான பிசாசு, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமேயன்றி வேறெவ்விதத்தினாலும் போகாது என்றார். மனிதன் தேவனோடு நெருங்கிய உறவும், உலகத்தோடு விசேஷித்த வேறுபாடும் உள்ளவனாயிருந்து உபவாசித்து ஜெபித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பது தெளிவாகிறது. ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து இரண்டு முக்கிய குறிப்புகளை நாம் அறிகிறோம். விசுவாசம் வளர்ந்து உறுதியுடனிருக்க ஜெப வாழ்வு அவசியம். மேலும் ஜெபம் முழுமையான வளர்ச்சி பெற உபவாசம் தேவை.

விசுவாசத்தீர்க்கு ஜெபம் தேவை

ஆவிக்குரிய வாழ்வின் வெவ்வேறு பகுதிகளில் இவற்றிற்கு மிக நெருக்கமான ஐக்கியமுண்டு. விசுவாசமின்றி எந்த உத்தம ஜெபமும் ஏறெடுக்கப்படுவதில்லை. அதுபோல ஜெபத்திற்கு முன்பாக விசுவாசம் வேண்டும். ஆயினும் அதிகமான விசுவாசத்திற்கு ஜெபம் வழியாயிருக்கிறது. அதிக ஜெபத்தினாலேயன்றி அதிக அளவிலான விசுவாசத்தைப் பெற முடியாது.

நமது வாழ்வில் விசுவாசம் வளர்ந்து வரவேண்டியது மிக முக்கிய மானதொன்று. 2தெச.1:3-ல் ஒரு சபையைக் குறித்து 'உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியால்' . . . எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்.9:29-ல் இயேசு "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" என்று கூறினார். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த அவரது போதனையின்படி அனைவரும் ஒரே அளவான விசுவாசம் உடையவர்களல்ல, ஒரே மனிதனில் கூட எப்போதும் ஒரே அளவான விசுவாசம் இருப்பதில்லை, என்று தெளிவாக்கப்பட்டுள்ளது. மேலும் விசுவாசத்தின் அளவு அதன் வலிமை ஆசீர்வாதம் ஆகியவற்றை நிர்ணயிக்கிறது. யாரேனும் ஒருவர் எங்கே, எப்படி நமது விசுவாசம் வளருகிறது என்று கேட்டால் நமது எஜமான் தேவ சிங்காசனத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார். ஜெபத்தின் மூலம், விசுவாசத்தைப் பயிற்சி செய்து, ஜீவனுள்ள தேவனோடு ஐக்கியங் கொள்வதால் அந்த விசுவாசம் வளருகிறது. விசுவாசம் நிலைத்திருக்க தேவனையே சார்ந்திருக்க வேண்டும்.

நாம் அவருக்காக காத்திருந்து தேவன் தம்மை வெளிப்படுத்தும் படியாக ஆத்துமாவை அர்ப்பணிப்பதும், தேவனை அறிந்து அவரை நம்பும் நம்பிக்கையை ஏற்படுத்தும். வேத புஸ்தகத்திலிருந்து அவரது வார்த்தைகளை வாசித்து, உள்வாங்கி, தமது ஜீவனுள்ள அன்பின் குரலால் நம்மிடம் பேசும்படி கேட்கும் போது, அதனை முழுவதுமாக விசுவாசிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் வல்லமை பெற முடியும். ஜெபத்தின் மூலமாகவே நாம் ஜீவனுள்ள விசுவாசத்தில் தேவனோடு ஜீவனுள்ள உறவை வைக்கிறோம். இந்த விசுவாசம் தேவனை நம்பும் வல்லமையாகும். இந்த நம்பிக்கையில் அவர் சொல்லும் யாவற்றையும் ஏற்றுக் கொள்வதோடு நம்மில் உறுதியடைகிறது. **அனேகக் கிறிஸ்தவர்களுக்கு அதிக ஜெபம் என்பது விளங்குவதில்லை. அதைக் குறித்த எந்தக் கருத்தும் அவர்களிடமில்லை. ஏன் பலமணி நேரங்களை தேவனோடு செலவிட வேண்டும் என்பது அவர்கள் கேள்வி.** ஆயினும் நமது ஆண்டவரின் கருத்துப்படி, உறுதி யான விசுவாசமுடையவர்கள் அதிகமாக ஜெபிக்கிறவர்களாகவே இருப்பார்கள்.

இயேசு 'தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்' என்றார் மாற்கு 11:22. ஜீவனுள்ள தேவனிலேயே நமது விசுவாசத்தின் வேர்கள் மிக ஆழமாகப் பரந்து செல்ல வேண்டும். அப்போது நமது விசுவாசம் மிகவும் உறுதியுடைய தாயிருக்கும். மலைகளைப் பெயர்க்கும், பிசாசுகள் ஓடும், உங்களுக்கு விசுவாசமிருந்தால் உங்களால் கூடாதது எதுவுமே இருக்க முடியாது.

இந்த உலகத்தில் தேவன் நமக்கு தந்திருக்கும் பணியில் உண்மையாயிருந்து நமக்கு மலைபோன்ற கஷ்டங்களும் பிசாசின் தொல்லைகளும் வந்தால் நாம் அதிக விசுவாசத்துடனிருக்க வேண்டும் என்பதைக் கண்டு கொள்வோம், அதோடு அதிகமான ஜெபமும் தேவை. ஏனெனில் விசுவாசம் வளர ஜெபம் என்ற மண் வேண்டும்.

கிறிஸ்து இயேசு நமது ஜீவன்; நமது விசுவாச வாழ்விற்கும் அவரே ஜீவன். அவரது ஜீவன் நம்மிலிருந்து நம்மை பலப்படுத்துகிறது. விசுவாசத்தையும் எளிதாக்கித் தருகிறது. சுயத்திற்கு மரிக்கும்போதுதான் அதிகமாக ஜெபிக்கவும் இயேசுவோடு நெருங்கி வரவும் விசுவாசத்தின் ஆவி வலிமையடையவும் முடியும். விசுவாசம் முழு வளர்ச்சி பெற ஜெபம் வேண்டும்.

ஜெபம் பண்ண உபவாசம் வேண்டும்

ஜெபம் முழுவளர்ச்சியடைய உபவாசம் வேண்டும். அதரிசனமான தேவனை ஜெபமாகிய ஒரு கரத்தால் பற்றிக் கொண்டு உபவாசமாகிய மறு கரத்தால் காணப்படுகிறவைகளைத் தள்ளி விடுகிறோம். உணவுக்கும் அதன் ரசனைக்கும் மனிதன் அதிக முக்கியத்துவம் அளிக்கிறான். புசிப்பதற்கு நன்றாயிருந்த கனிதான் ஆதாம் ஏவாளைப் பாவத்திற்குட்படுத்தி, பரதீசை இழக்கச் செய்தது. வனாந்திரத்தில் 40 நாட்கள் உபவாசித்த இயேசுவுக்கு வந்த முதல் சோதனை கற்களை அப்பமாக்கி சாப்பிட வேண்டும் என்பதாகும். உபவாசத்தால் அவர் சாத்தானை ஜெயித்தார். நமது சரீரம் தேவனுடைய ஆவியின் ஆலயமாயிருக்கவே மீட்கப்பட்டுள்ளது. புசிப்பதாலும், குடிப்பதாலும், தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று வேத வசனம் கூறுகிறது. ஆனால் அனேகக் கிறிஸ்தவர்களுக்கு இவை தேவ மகிமைக் காகச் செய்யப்பட வேண்டும் என்பது ஒரு உண்மையாகத் தெரியவில்லை. உபவாசம் ஜெபம் என்பவைகளைக் குறித்த இயேசுவின் போதனையில் எல்லாம் கிரமமாக செய்யப்பட வேண்டும் என்பதும் சுயவெறுப்பு அவசியம் என்பதும் வெளிப்படுகிறது. இதன் மூலம் நாம் அதிகமாக ஜெபிக்கத் தூண்டப்படுகிறோம்.

இதில் இன்னொரு கருத்தும் வெளிப்படையாயிருக்கிறது. கவலையும் துக்கமுமிருக்கும் போது உண்ண முடிவதில்லை. ஆனால் சந்தோஷம் வரும்போது விருந்தும் கொண்டாட்டமும் புசிப்பும் குடிப்பும் நடைபெறும். சிலவேளைகளில் பசியுள்ளதாயிருந்தும் அந்தகார சக்தி ஆவியைத் தடுப்பதால் அதைக் கட்டுப்படுத்த வேண்டியதாகிறது. நாம் புலன்களையுடையவர்கள். உபவாசம் நாம் எதையும் தியாகம் செய்ய நம்மைத் தூண்டுகிறது. தேவராஜ்யத்தைத் தேட எதையும் தியாகம் செய்ய உபவாசம் உதவுகிறது. குமாரனுடைய உபவாசத்தையும், தியாகத்தையும் ஏற்றுக் கொள்கிறவர்கள் இதனால் கிடைக்கும் ஆவிக்குரிய வலிமையை உணர்ந்து கிறிஸ்துவுக்காகவும், அவருடைய ராஜ்யத்திற்காகவும் எதையும் தியாகம் பண்ண முன் வருவார்கள்.

ஜெபம் என்பது தேவனையும் காணாதவற்றையும் எட்டிப் பிடிப்பதற்கு ஒப்பானது. உபவாசமோ மாம்சத்துக்குரியவைகளையும் காணப்படுகிறவைகளையும் வெளியே தள்ளுகிறது. சாதாரண கிறிஸ்தவர்கள் நேரடியாக விலக்கப்படாதவைகளும் பாவங்களும் அனுமதிக்கப்படலாம் என்று எண்ணுகிறார்கள். எனவே லௌகீக காரியங்களில் எவற்றையெல்லாம் அனுபவிக்க முடியுமோ அவற்றையெல்லாம் அனுமதிக்கிறார்கள். சொத்து சுகங்கள், இலக்கியங்கள், கேளிக்கைகள் எல்லாவற்றையும் அனுபவிக்க விரும்புகிறார்கள். ஆனால் உண்மையான அர்ப்பணமுள்ள ஆத்துமா ஒரு யுத்தவீரனைப்போல யுத்தத்திற்குத் தேவையானதை மட்டும் எடுத்துக்கொள்ளுவான். எல்லாப் பாரங்களையும் சுற்றிலும் நெருங்கி நிற்கிற பாவத்தையும் அவன் விட்டு விடுவான். அவை தன்னைச் சிக்க வைத்து விடும் என்ற பய உணர்வுடன் ஒரு நசரேயனைப் போல வாழ்வான். தான் கர்த்தருக்கும் அவருடைய பணி விடைக்கும் மட்டுமே பிரித்தெடுக்கப்பட்டவன் என்ற உணர்வு எப்போதுமிருக்கும். இவ்வாறு தானாகவே தன்னைப் பிரித்துக் கொள்ளாதவன் ஜெபத்தில் வல்லமை பெற முடியாது.

இயேசுவின் சீடர்களே, எங்களுக்கு ஜெபிக்கப் போதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்களே, இப்போது வந்து அவரது போதனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். அவரது சொற்படி ஜெபமே விசுவாசம், உறுதியான விசுவாசத்திற்கு வழி. அதன் மூலமாகவே பிசாசுகளைத் துரத்த முடியும். "உங்களுக்கு விசுவாசமிருந்தால் உங்களால் கூடாதது ஒன்றுமில்லை" என்று இயேசு கூறுகிறார். இந்த வாக்குத் தத்தம் உங்களை அதிகமாக ஜெபிக்கத் தூண்டுவதாக. இயேசுவைப் பின்பற்ற எல்லாவற்றையும் விட்டு விடலாமா? உபவாசிக்க வேண்டாமா? நமது உடலோ, உலகமோ நம்மைத் தடுத்தாலும் தேவனோடு ஜெபத்தில் தரித்திருப்போமா? நாங்கள் ஜெப வீரர்களாக மாறுவதன் மூலம் தேவன் நம்மை அவரது பணியில் பயன்படுத்தி உலகத்தை ஆதாயம் பண்ணட்டும்.

மன்னிப்பு; உங்கள் இருதயங்களில் சேமித்து வைக்கப்பட்ட காயங்களை குணப்படுத்தும்

Forgiveness; Healing the harbored hurts of your heart

Bill Elliff

காயங்களை நமது இருதயங்களில் சேமித்து வைப்பதால் கசப்பு உருவாகிறது. ஒரு விஷக் கொடியைப் போல கசப்பு நமது உணர்ச்சிகளைச் சுற்றிக்கொண்டு நமது எண்ணங்களை ஊடுருவி, நமது ஆத்துமாவின் உயிரைத் திணறச் செய்கிறது. கசப்புணர்வு நமது சந்தோஷத்தையும், சமாதானத்தையும் திருடுகிறது. நாம் விரும்பாத இடங்களுக்கு அது வலுக்கட்டாயமாக எடுத்துச் சென்று நாம் விரும்பாத காரியங்களைச் செய்யவைத்து நாம் நம்மையே விரும்பாத நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது.

கசப்பு மிகவும் தந்திரமானது. அது நம்மில் இருப்பதை நாம் உணர்வதில்லை. கசப்பு என்ற பதமே நாம் விரும்பாத ஒன்று. நாம் கசப்புடையவர்கள் என்று எண்ணப்பட நாம் விரும்புவதில்லை. ஆயினும் நம்மில் அனேகர் கசப்புடனிருக்கிறோம். எனது வாழ்வில் இதனைக் குறித்து நான் பிரசங்கித்த போதும் என்னில் கசப்பு காணப்பட்டது. பிறரிலுள்ள கசப்பை நான் பார்க்க முடிந்தும் என்னிலுள்ள கசப்பை என்னால் பார்க்க முடியவில்லை.

அதிக வேதனையோ அடையாளங்களோ வெளிப்படையாகத் தெரியாத படியால் கசப்பு சரியாகக் கண்டுபிடிக்கப்படுவதில்லை. அதிகமாகக் காயப்பட்டவர்கள் மட்டுமே கசப்புணர்வு கொள்வார்களென்று தவறாக சிந்திக்கிறோம். ஆனால் புற்று நோயின் ஒரு அணு பல சாலியான ஒருவனையும் கூட கொன்று விடும். மனதில் சேமித்து வைக்கப்பட்ட ஒரு சிறு காயம் சக்தி வாய்ந்தது. உங்கள் சரீரத்திலே ஒரு சில புற்று நோய் அணுக்கள் இருக்கிறது என்று நீங்கள் அறிந்தால் நிம்மதியாக இருப்பீர்களா? அதுபோல உங்கள் இருதயங்களில் ஏற்பட்ட காய உணர்வுகளைக் குறித்தும் நிர்விசாரமாயிருக்கக் கூடாது. சாத்தான் கசப்பைக் காணாதபடி உங்கள் கண்களை மறைத்தால் அவை சிறிதாயினும் பெரிதாயினும் அவன் உள்ளே நுழைய அது ஏதுவாகிவிடும்.

உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுத்துங்கள். உங்கள் வாழ்வில் ஏதேனும் ஒரு பகுதியில் காயப்பட்டிருந்தால் உத்தமத்தோடு, 'ஆண்டவரே என் இருதயத்தில் கசப்பு இருந்தால் தயவாக அதை இன்று எனக்குக் காண்பித்தருளும்' என்று ஜெபிப்பீர்களா?

நாம் நம்மிலுள்ள கசப்புணர்வை காணாவிட்டாலும் அதின் தாக்கம் பிறரில் வெளிப்படுத்தப்படும். எனவே தான் எபி.12:15-ல் "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாத படிக்கும், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பி கலக்கமுண்டாகி . . ." என்று வாசிக்கிறோம்.

கசப்பு எப்போதும் ஊற்றாக எழும்பக் கூடியது

நாம் கசப்புணர்வை கட்டுப்படுத்த முயற்சித்தாலும் அது நமது ஆத்துமாவின் வழியாகக் கசிந்து வெளியேறும். அது மேற்பரப்பை அடைந்து ஏதேனும் உருவத்தில் வெளியே வந்து விடும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் எனது தோட்டத்தை சுத்தம் செய்த போது தற்செயலாக ஒரு கூர்மையான கத்தியால் ஒரு செடி வெட்டப்பட்டு விட்டது. ஆனால் பின்னாட்களில் அதிலிருந்து துளிர்கள் எழும்ப ஆரம்பித்தன.

மண்ணிற்கு அடியில் வேர்ப்பகுதியில் உயிர் இருந்தபடியால் நான் வெட்டி வீழ்த்திய செடி வளர ஆரம்பித்தது.

இதுபோலவே தேவனுடைய முறைப்படி கசப்பு வேரிலிருந்து அகற்றப் படாவிட்டால் அது பட்டுப் போவ தில்லை, அது வளர்ந்து பெரிதாகி விடும்.

கசப்பு எப்போதும் தொல்லையை உண்டு பண்ணும்

கசப்பின் வேர் நம்மிலிருந்தால் பல்வேறு தொல்லைகளை அது உருவாக் கும். மனச்சோர்வை, நம்பிக்கையின்மை, கோபம், ஆத்திரம், பயம், கவலை போன்ற வற்றை அது ஏற்படுத்தும். உங்கள் செயல் பாடுகளும் பிரதிவினைகளும், விமரி சனம், அதிகப் பேச்சு, தவிர்த்தல், பதில ளித்தல், கடின வார்த்தைகள் ஆகியவை களாக வெளிப்படும்.

ஒரு நாய் ஒருமுறை உங்களைக் கடித்து விட்டால், மறுமுறை அதனை சந்திக்க விரும்ப மாட்டீர்கள். இவ்வாறு ஒருமுறை மனக்காயம் அடைந்தவர்கள் இந்த அனுபவம் மறுபடியும் ஏற்படாத படி தங்களை எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ள முயற்சிக்கலாம். இந்த நடபடி நமது பழக்க வழக்கமாக மாறி விடுவதால் நாம் யார்? நாம் என்ன செய்கிறோம்? என்பதே மறந்து விடுகிறது.

அனைத்து சூழல்களையும் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு நபராய் இருக்கிறீர்களா? அடிக்கடி கோபத்தை வெளிப்படுத்துகிறீர்களா? நீங்கள் அதிக உணர்ச்சிவசப்படுவதால் மற்றவர்கள் உங்களருகில் வர பயப்படுகிறார்களா? மற்றவர்கள் உங்களை நெருங்கக் கூடா மல் உங்கள் முகத்தோற்றமே தடையாகக் காணப்படுகிறதா?

பிறர் நம்மை இன்னும் காயப் படுத்தாதபடி இத்தகைய நடபடிகளை நாம் நம்மை சுற்றி ஏற்படுத்திக் கொள்கி றோம். அவை யாவும் நம்மை அழிவுக்கு நேராக வழிநடத்துகின்றன. நாம் அதிகக் காயங்கள் ஏற்படாதபடி எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் நம்மிலும் பிறரி லும் அதிக வேதனைகளை அதிகரிக்கவே செய்யும்.

இவ்வாறு மனக்காயங்களை பல வருடங்கள் சேமித்து வைப்பதால் நாம் தீர்மானங்கள் எடுக்க முடியாதவர் களாகவும் அனைத்து தொடர்புகளிலும் வெறுப்படைகிறவர்களாகவும் மாறிவிடுகிறோம். கசப்பு நம் உள்ளத்தி லிருந்து வெளிப்பட்டுக் கொண்டே யிருக்கும். நாம் அதற்காக மனவருத்த மடைவோம்.

கசப்பு எப்போதும் அனேகரைத் தீட்டுப்படுத்தும். கசப்பு தனிமைப் படுத்த முடியாதது. அது தொற்று நோய்ப் போல பரவக் கூடியது. ஒருவரிடம் காணப்படும் கசப்பு சுற்றிலுமுள்ள மக்களிடம் பரவி மக்களைக் காயப் படுத்தும்.

குடும்பங்கள் முழுவதுமாக விஷம் போல் பரவிவிடும். அது ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு பரவக் கூடியது எண்.14:18. கசப்பு நிறைந்த ஒரு மனிதனை நான் அறிவேன். அவர் 40 வருடமாக ஒரு மனக்காயத்தை வைத்து நொந்து கொண்டேயிருந்தார். கசப்பின் வேரானது அனேக தீய விளைவுகளை ஏற்படுத்தியது. அவரது மகனும், பேரமகனும் கூட கசப்பின் மனப்போங் கினையுடையவர்களாயிருந்தனர். நாம் அதிகமாக நேசிக்கிற நமது பிள்ளை களும், அவர்களது பிள்ளைகளும் நம்மால் பாதிக்கப்படுவதை விட கூடுதலான துக்கம் உண்டா?

கசப்பான எண்ணங்களை வைத்துக் கொண்டே, எந்த பாதிப்பு மின்றி வாழலாம் என்று நாம் எண்ண லாம். அது தவறானது. கசப்பின் வேர் எவ்வளவு ஆழமாகச் சென்றிருக்கிறது என்பதை நாம் அறிய முடியாது. அது நமது எண்ணங்கள், தீர்மானங்கள், மனப் போங்குகள், செயல்கள் போன்ற யாவற் றையும் மாற்றமடையச் செய்யும். உங்கள் வாழ்வின் பெரும்பகுதியும் கசப்பினால் நடத்தப்படும்.

நமது மனக்காயங்களை வைத்து வைத்திருப்பது நல்லதா? அதன் வேதனை நமக்கு வேண்டுமா? உங்கள் வாழ்வில் எத்தனை காலம் இப்படியே வாழ விரும்புவீர்கள்? உங்கள் நண்பர்கள் அருமையானவர்கள் போன்றவர்களில் யாரோடு கசப்பாகிய விஷத்தைப் பகிர்ந்து கொள்கிறீர்கள்?

சேமித்து வைக்கப்பட்ட காயத்திற்கு நிவாரணம்

இந்த நிலையிலிருந்து எங்கே செல்ல விரும்புகிறீர்கள்? உங்கள் காயங்களிலிருந்து எப்படி விடுபட இருக்கிறீர்கள்? அது உங்கள் ஆத்துமா வுக்கு அளித்த கேட்டினை எவ்வாறு தணிப்பீர்கள்?

தேவனிடம் ஒரு அற்புதமான திட்டம் இருக்கிறது. அதன் மூலம் இக்கசப்பு உணர்விலிருந்து விடுதலையும் சுகமும் பெறலாம். நீங்கள் முற்றிலும் தேவனுடைய தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிந்து பின்பற்றினால் கசப்பு மாறுவது மட்டுமல்ல உத்தம ஸ்தோத்திர பலி ஏறெடுக்கும் நிலையை அடை வீர்கள். அவர் 'சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தை' அளிக்கிறவர். உங்கள் கடந்தகால வேதனைகளை எதிர்காலத் தில் ஊழியத்திற்குப்படிகளாக பயன் படுத்துவார். காயங்கள் நீக்கப்படுவ தோடு பிறருக்கு ஊழியம் செய்யவும், அவர்களுடைய நன்மை தேவ நாம மகிமை ஆகியவற்றிற்காக பயன்படுத்து வார். தேவன் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

பின்வரும் தத்துவங்கள் மிகப் பெரிய வேதனைகள் மத்தியிலும் உங்கள் வாழ்வு மாற்றமடைந்து, விடுதலை பெற்று, உங்களை பயனுள்ளவர்களாக மாற்றக்கூடும். இந்தப் படிகளை நீங்கள் தாமே எடுத்து வைக்க முடியாது. தேவனு டைய கிருபை நம்மைத் தாங்க வேண் டும். நாம் தாழ்மையோடு கதறி ஜெபித்து அந்தக் கிருபையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1. உங்கள் சொந்த பாவங்களைக் கண்டறிந்து அவற்றை ஒப்புக் கொள்ளுங்கள்:

'நான் ஒப்புக் கொள்ள வேண்டி யதில்லை, தவறு செய்தவர் அவர்தான்' என்று சொல்லுகிறோமா? பிறரை நாம் மாற்ற நினைக்க வேண்டாம். நம்மையும் நமது மனப்பான்மையையும் மாற்ற லாமே. காயப்பட்டபடியினாலே கசப் பும், கோபமும், வைராக்கியமும், பதில் செய்தலும், விமர்சித்தலும் உங்களில் காணப்படுவதால் நீங்கள் பாவம் செய்து விட்டீர்கள், அதிகமாக சத்தமிட்டு நீங்கள் குற்றமற்றவர்களென நிரூபிக்க முயற்சிக்கிறீர்கள். ஆனாலும் நிவாரண மில்லை. கசப்பின் பலன்களை நீங்கள் தொடர்ந்து அனுபவிப்பதோடு உங்கள் பாரமும் அதிகரிக்கிறது. எனவே வேதனை யும் பெருகுகிறது. பதிலாக ஆண்ட வரிடம் திரும்பி உத்தம மனத்தாழ்மை யோடு உங்களைக் கழுவும்படி அழுது கேட்கலாமே.

2. தேவனுடைய சர்வவல்லமையைத் தழுவிக் கொள்ளுங்கள்:

உங்கள் உரிமைகளை விட்டு விட்டு தேவன் தாம் விரும்புகிறவை களை நமது வாழ்வில் செய்யும் உரிமை உண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இப்படி ஒரு மனக்காயத்தை தேவன் நமக்கு அனுமதித்தால் அதிலி ருந்து விடுபடும் கிருபையையும் அவர் வாக்களித்துள்ளார். வேதனைகள் மத்தி யில் தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் அவர் பெரியவராயிருக்கிறார்.

இன்னும் கோபமாயிருக்கிறீர் களா? உங்கள் பிரச்சனைகளைவிட தேவன் பெரியவர். எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாகவும் தமது மகிமைக் கேதுவாகவும் மாற்றக் கூடியவர்.

3. மன்னியுங்கள் – கடனைத் தீர்த்து விடுங்கள்

உங்களுக்கு எதிராகக் குற்றம் செய்த வர்களை நிபந்தனையின்றி மன்னியுங் கள். இதைத் தவிர சேமித்து வைக்கப் பட்ட காயத்தை ஆற்ற வேறு வழியே யில்லை.

எனவே 1கொரி.13:5-ல் அன்பு, "சினமடையாது தீங்கு நினையாது" என்று படிக்கிறோம்.

நம்மில் அனேகர் நமது இருதயத் தில் ஒரு பற்று வரவு புத்தகத்தை வைத்தி ருக்கிறோம். யாரேனும் நமக்கு தீங்கு செய்யும்போது அவர்கள் பெயரை அதில் குறித்துக் கொள்கிறோம். அவர்களைக் கடனாளிகளாக எண்ணுகிறோம். அவர்கள் எனக்குக் கடன்பட்டவர்கள். அதற்கு நான் பதில் செய்ய வேண்டும் என்று துணிச்சல் கொள்கிறோம்.

இதைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார், ரோமர் 12:17-21 வாசிக்க

எனவே பதிலளிக்கிறவர் தேவன். தீமைக்கு தீமை நாம் செய்யக்கூடாது. நாம் மனக்காயம் அடையும்போது

இரண்டு காரியங்களைச் செய்யலாம்

1. அக்காயத்தை நம் இருதயத்தின் புத்தகத்தில் எழுதிக் கொண்டு பழிவாங்க திட்டமிடலாம்

நமது தொடர்பை முறித்துக் கொள்ளலாம், நம்மை துன்புறுத்திய வரை திட்டலாம், கோபத்தை வெளிப் படுத்தலாம், அவர்களைக் காயப் படுத்தவோ, நற்பெயரைக் கெடுக்கவோ முயற்சிக்கலாம்; அவர்களது முன்னேற் றத்தைத் தடுக்கலாம். மேலும் அவர்களை உதாசீனப்படுத்தி புரளிகளைக் கிளப் பலாம். இவ்வாறு எத்தனையோ காரியங் களைச் செய்யலாம். வாய் பேசாமல் அமைதியாய் புன்முறுவல் கூட செய்ய லாம். ஆனால் நாம் கோபத்தோடிருப் போமானால் அவர்களை ஏற்கெனவே கொலை செய்து விட்டோம் மத்.5:21-22.

குற்றங்களை மனதில் வைத்துக் கொள்வதும், பழிவாங்குவதும் நம்மை அதிகமாக காயப்படுத்துபவைகளாகும். பழிவாங்கும் எண்ணம் கிறிஸ்துவின் சாயல் நம்மில் உருவாகத் தடையா யிருக்கிறது. கசப்பு என்னும் சங்கிலி களால் நம்மைக் கட்டி வைக்கிறது. இறுதியாக நமது வாழ்வையே அழித்து விடுகிறது. நம்மைத் துன்புறுத்திய வர்களுக்கு தேவன் தகுந்த தண்டனை கொடாதபடி அவரைத் தடுக்கிறது.

சண்டையிடும் போட்டியில் (Boxing) தேவன் இருவரை மட்டும் அனுமதிக்கிறார். நீங்கள் போட்டியில் நின்றால் தேவன் உங்களை விட்டு விடுவார். தேவன் உங்களுக்காக போட்டி யிட வேண்டுமானால் நீங்கள் அமைதியா யிருக்க வேண்டும்.

2. தேவனுடைய கரத்திலேயே எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும்

மன்னிப்பு என்பது நமது உணர்ச் சிவசமான செயலல்ல. அது நமது சித்தத் தின் தெரிந்தெடுப்பு. ஒரு வியாபாரி தனது கணக்குப் புத்தகத்திலிருந்து ரத்து செய்து விடுவது போல உங்களுக்கு எதிராகத் தவறு செய்தவரைக் குறித்த அனைத்து கடன்களையும் எந்த நிபந் தனைகளுமின்றி அழித்துப் போட வேண்டும்.

மேலும் மன்னிப்பு என்பது ஒரு விசுவாசத்தின் செயல். நாம் பதில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விடும்போது, நம்மைத் துன்புறுத்தியவர் களது காரியங்களை தேவனுடைய கரத்தில் விட்டு விடுகிறோம். அதற்குரிய உரிமைகளை தேவனுக்கு அளிக்கிறோம். எனவே இந்தப் பொறுப்பு முழுவதும் தேவனிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இந்த வேத அடிப்படையிலான பாதையை நாம் தெரிந்து கொண்டால் நாம் ஏமாற்றமடையமாட்டோம். தேவன் சரியான விதத்தில் நமது எதிராளியை கவனிக்கப் போதுமான நற்குணமும், உத்தமமும், ஞானமுமு டையவர். நாம் எதையும் சரியாகச் செய்ய அறியாதவர்கள். அவரோ எல்லா வற்றையும் சரியாகச் செய்யக் கூடியவர்.

உங்கள் பற்று வரவுக் கணக்குப் புத்தகத்தில் தேவனது பெயர் எழுதப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடை வீர்கள். நீங்கள் கசப்பை விட்டு விடும் போது தேவனுக்கு எதிராக உங்கள் இருதயத்தின் சிந்தனைகள் அனைத் தையும் விட்டு மனந்திரும்ப வேண்டும்.

ஒருவேளை உங்கள் இருதயக் கணக்குப் புத்தகத்தில் பல பெயர்கள் இருக்கலாம். இவர்கள் உங்களைப் புண்படுத்தியவர்கள். ஒருவருடைய பெயர் அடிக்கடி வருகிறது. எனவே அவர் பலமுறை உங்களை காயப்படுத்தி யவர். இவர்கள் எல்லோரையும் எத்தனை காலம் வெறுப்புடன் வைத்திருப்பீர்கள் . . . . அவர்கள் சாகும் வரையா? அல்லது நீங்கள் சாகும் வரையா? உங்கள் தயவைப் பெற அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் முழுவதுமாகக் கடனைத் தீர்க்க முடியாது.

ஆனால் நீங்கள் ஒன்று செய்ய லாம். உங்கள் சித்தத்தின் தெரிந்து கொள்ளுதலின்படி விசுவாசத்தின் செய லாக அனைத்துக் கடன்களையும் உங்கள் இருதயத்திலிருந்து அகற்றி விடலாம்.

4. உங்கள் இருதயம் தேவனுடைய தூய்மை யாக்கும் அன்பினால் நிரப்பப்படும்படியாக ஜெபியுங்கள்.

நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டுமென்பது தெளிவான கட்டளை மத்.5:38-48. எதிரிகளைக் கூட நாம் நேசிக்க வேண்டியவர்கள். தேவன் இதில் தலையிடாவிட்டால் இது நம்மால் கூடாதது. நீங்கள் தேவனோடு ஒரு உத்தம உறவில் வந்து விட்டால் தூய ஆவியானவர் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வார். (1யோவான் 4:7-8) நீங்கள் உங்களை முற்றிலும் அவருக்கு அர்ப்பணித்தால் உங்கள் காயங்களை அகற்றுவதோடு அற்புதமாகத் தமது அன்பை உங்கள் இருதயங்களில் ஊற்று வார். அன்பு ஆவியின் முதற்கனி. (கலா.5: 22) அப்போது கசப்பு என்னும் காடி மன உருக்கமென்னும் இனிப்பாக மாறும். எத்தனை அற்புத பரிவர்த்தனை!

தேவ அன்பால் உங்கள் இருத யங்களை நிரப்பும்படி தேவனிடம் கேட் பீர்களா? குறிப்பாக உங்களை துன் புறுத்துகிறவர்களை நேசிக்கும் அன்பால் நிரப்பப்படுங்கள். நீங்கள் தேவனோடு ஒத்துழைத்தால் அவர் தமது வல்லமை யால் உங்களை நிரப்புவார். உங்களில் வாழும் கிறிஸ்துவின் தன்மை உங்களில் வெளிப்படும்.

5. இந்த அனுபவத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

தேவனுக்கு நன்றி செலுத்து வதற்கும், தேவனுக்கு நன்றியுள்ளவர் களாயிருப்பதற்கும் வித்தியாசமுண்டு. நன்றியுடைமை என்பது ஒரு உணர்ச்சி. அதை சில வேளைகளில் நாம் உணர லாம், சில வேளைகளில் உணராமலு மிருக்கலாம். ஒரு சூழ்நிலையைக் குறித்து நன்றி உணர்வற்றவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் ஸ்தோத்திரம் பண்ண அழைக்கப்படுகிறோம் (1தெச.5: 18, எபே.5:20, பிலி.4:4)

செய்யக்கூடாதது போன்ற ஒரு கட்டளையை ஏன் தேவன் கொடுத்தார்?

நமது மிகப் பெரிய வைத்தியர் நன்றி செலுத்துதலின் அதிசயமான குணமாக்கும் தன்மைகளை அறிந்திருக் கிறார். நன்றி செலுத்துவது தேவனு டைய சத்துவத்தை நமக்கு வெளிப் படுத்தி அவரது பார்வையில் சூழ்நிலை களைப் பார்க்கும்படி நமது கண்களை உயர்த்துகிறது. நன்றி சொல்லும் கீழ்ப் படிதல் நமது உள்ளங்களை வேதனை களிலிருந்து தூரப்படுத்தி நமது எண்ணங் களை அவரது திட்டங்களுக்கு நேராகக் குவியச் செய்கிறது.

இவ்வகையான விசுவாச அடிப் படையிலான ஸ்தோத்திரம் செலுத்துதல் "ஆண்டவரே, நான் இதைப் புரிந்து கொள்ளாவிடினும் இந்த சூழ்நிலைக்குப் போதுமானவர் என்று நம்புகிறேன். எனவே நன்றி செலுத்துகிறேன். நீர் உமது சிங்காசனத்தை விட்டு விலகவில்லை. இது உமக்கு ஆச்சரியமானதல்ல. உம்மி டம் ஏராளமான கிருபையும் தெய்வீகத் திட்டங்களும் என் வாழ்வில் என் தொல்லைகள் மத்தியில் உண்டு" என்று ஜெபிக்க முடியும்.

6. தொடர்ந்தும் உடனுக்குடனும் மன்னியுங்கள்

சத்துருவாகிய சாத்தான் உடனே தோல்வியை ஏற்றுக் கொள்வதில்லை. விசுவாசம், மன்னிப்பு ஆகியவை பல முறை பரீட்சிக்கப்படலாம். ஒரே நபர் மூலமாகவே சோதனை வரலாம். கடந்த கால நினைவுகளை ஞாபகத்தில் கொண்டு வந்து உங்கள் பழைய கோபம் பழி வாங்குதல் ஆகிய உணர்ச்சிகளை சாத்தான் தூண்டி விடலாம்.

இப்படிப்பட்ட வேளைகளில் பழைய காயங்களை மறுபடியும் எண்ண நேரிடலாம், அல்லது தேவன் உங்களை தேவ பிள்ளையாக மாற்றி உங்கள் நற்குணம் பலப்படுத்தப்பட்டிருப்பதை உணரலாம். வாழ்வில் வரும் ஒவ்வொரு காயமும் இயேசுவைப்போல மன்னிக் கவும், அன்பு கூரவும் நமக்கு அளிக்கப் பட்ட வாய்ப்பு என்று உணர வேண்டும் எபே.4:32.

தொடர்ந்து வரும் கஷ்டங்கள் தேவன் இன்னும் உங்களைப் போதித் துக் கொண்டேயிருக்கிறார் என்பதையும் அவரைப் போலாக்க முயற்சிக்கிறார் என்பதையும் காண்பிக்கின்றன. **தேவனைப் போல வாழ மன்னிக்கப்படுக்க வேண்டும்.**

> கொதிக்கும் நீரில் ஒரு தவளையை போட்டால் அது உடனே வெளியே தாவிவிடும். ஆனால் குளிர்ந்த நீரில் அதை போட்டு மெதுவாக சூடேற்றினால் அது என்ன நடக்கிறதென்பதை அறியாமல் அங்கே செத்து விடும். இப்படித்தான் அடக்க ஒடுக்கமின்மை நமது சபை களுக்குள் தந்திரமாய் கொஞ்சம் கொஞ்ச மாக நுழைந்ததால் சபைகளுக்குள் கண்ணியமான நாகரீகம் அணுஅணுவாய் சிதைந்து செத்துக் கொண்டிருக்கிறது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

எழுப்புதலுக்காக இதய கதறல்

காந்தி நகர் C.S.I. சபை *(11-11-2017)*

கர்த்தருடைய பெரிதான கிருபையால் உபவாச ஜெபம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. 7 மணி நேர உபவாச ஜெபம் எதற்கு? என்ற எண்ணத்தோடு இருக்கும் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு தேவன் தம்முடைய வசனத்தின் மூலம் பதிலளிக்கிறார்.

பரிசுத்த வேதாகமம் கூறும் உபவாசம்

5 குறிப்புகள்:

1. சாயங்காலம் மட்டும் உபவாசம் *நியா.20:26.*

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப் போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலம் மட்டும் உபவாசித்து . . . .

2. சில நாளாய் . . . .உபவாசித்து *நெகே.1:3,4.*

. . . .எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, **சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து,** மன்றாடினேன்.

3. மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து உபவாசம் *எஸ்தர் 4:16.*

4. இரவும் பகலும் நாற்பது நாள் *உபா.9:18*

கர்த்தரைக் கோபப்படுத்துவதற்கு நீங்கள் அவருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்து நடப்பித்த உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பது நாள் விழுந்து கிடந்தேன்; நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை.

5.தேவனை விசுவாசித்து உபவாசம் *யோனா3:5.*

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்.

அருமையான போதகர் Rev.G.**ஆசீர்** அவர்களுக்காக நான் ஆண்டவரை அதிகமாக துதிக்கிறேன்.

யோனார்டு ரேவன்ஹில் என்ற பக்தன் இவ்வாறு எழுதியுள்ளார்:

"இவ்வித திடனற்ற திமிர்வாதப் பிரசங்கங்கள் வேண்டியதில்லை. இவை எவரையுமே அசைப்பதில்லை. ஏனென்றால், இது உள்ளறையிலல்ல, கல்லறையில் பிறந்து, அனலற்ற ஜெபமற்ற ஆத்துமாவில் வளர்க்கப்பட்டது. நாம் பிரசங்கித்துப் பிரசங்கித்துப் பின்வாங்கிப் போகலாம்; ஆனால் ஜெபித்து, ஜெபித்து ஒரு நாளும் ஜெயமிழக்க மாட்டோம்".

அதுபோல, பிரசங்கங்களைக் கேட்டு, கேட்டு அஜீரணம் ஏற்பட்டு போனது; இனி ஜெபம்தான் தேவை என்று போதகர் தன் முகவுரையில் கூறியது மிகவும் உண்மையல்லவா? தேவன் போதகரையும், குடும்பத்தினரையும் அதிகமாய் ஆசீர்வதித்து தேவ ராஜ்ய மகிமைக்காக அதிகமாய் பயன்படுத்துவாராக, ஆமென்.

வீண் காணிக்கை, வீண் பண்டிகை

ஒரு மிஷனெரி பத்திரிகையில் அச்சிடப்பட்டிருந்ததில் ஒரு சிறு பகுதியை கீழே அச்சிடுகிறேன்:

. . . இன்னும் பல இடங்களில் ஆராதிப்பதற்கான ஆலயங்கள் கட்டப்பட வேண்டியுள்ளது.

முன்பக்க அட்டையின் ஒரு படத்தில் நமது ஆராதனை நடைபெறும் ஒரு இடத்தில் இரண்டு பிளாஸ்டிக் வாளிகள் வைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் பார்க்கிறீர்கள். இது காணிக்கை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டதல்ல.

செப்டம்பர் மாதம் 30-ம் தேதி ஞாயிறு மாலை கைமரா என்ற இடத்திலுள்ள ஆராதனை ஸ்தலத்தில் கண்ட காட்சியைத்தான் வேதனையோடு உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

மாலை வேளையில் ஆராதனை ஆரம்பித்ததும், மழை பெய்ய ஆரம்பித்தது. ஜனங்கள் இருப்பதற்கே இடம் போதாத அளவுக்கு நெருக்கடியான நிலை. மூங்கில் அடித்து மண்பூசி சுவர் அடைக்கப்பட்ட அறையில் மேல் கூரையிலிருந்து தண்ணீர் அதிகமாக விழுந்ததால் கூடிவந்திருந்த தேவ பிள்ளைகள் மிகவும் நெருக்கப்படுகிற நிலை.

♦♦♦♦♦♦♦♦♦

அருமையான விசுவாசியே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உன்னை இரட்சித்தது, நீ பல ஆயிரங்கள் அல்ல லட்சங்கள் செலவு செய்து குடில் அமைத்து கொண்டாட அல்ல. இந்த ஆண்டாவது தூதன் வாசகர் **உங்கள் பணங்களை பட்டாசு, பட்டாடைகள், பட்டொளி வீசும் வீண் அலங்காரங்கள் என்று வீணாக்காமல்**, "சத்திரத்திலே இடமில்லாதிருந்தபடியினால் துணிகளிலே சுற்றி, முன்னணையிலே கிடத்தப்பட்ட" ராஜாவுக்கு ஆலயம் இல்லாத கிராமங்களில் ஆலயம் கட்ட கொடுக்கலாமே!

"இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வர வேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க மாட்டேன்.

உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன் *ஏசாயா 1:13,14.*

தொலைபேசி, மொபைல்

இன்றைக்கு இவைகள் இல்லாத வர்களே இருக்க முடியாது. தயவு செய்து எங்களை தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு தடவையும் உங்கள் தொலை பேசி (Land Line) அல்லது மொபைல் எண்ணை சிரமம் பாராமல் எழுதுங்கள்.

மணியாடர் அனுப்பும் போதும், காசோலை அல்லது டிமான்ட் டிராப்ட் அனுப்பினாலும் வருத்தம் பாராமல் தொலைபேசி எண்களை ஒவ்வொரு முறையும் எழுதுங்கள். அது உங்களை உடனுக்குடன் தொடர்பு கொள்ள மிகவும் உதவியாயிருக்கும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

தேவ கிருபை உங்களோடிருப்பதாக

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

Office : 95432 21008
Associate : 94897 40295
For Prayer : 94980 30295
Editor : 04652 403295

10.00 a.m to 1.00 p.m
02.00 p.m to 6.00 p.m
Sunday Holiday

தேவனோடு தனித்திருப்பது

Alone with God
Andrew Murray

"நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" *மத்.6:6*

ஒரு மனிதன் தன்னை உலகத்திற்குரியவைகள், மனிதனுக்குரியவைகள் போன்றவற்றிலிருந்து விலக்கிக் கொண்டு, தனியாக தேவனுக்காகக் காத்திருக்கும்போது பிதா தம்மை அவனுக்கு வெளிப்படுத்துவது உறுதி. அவன் உலகத்தை வெறுத்து, விலக்கி, உலக வழியிலான வாழ்வுக்குத் தன்னை விலக்கி, தேவ பிரசன்னத்தில் தனியாகக் காத்திருக்கும்போது பிதாவின் அன்பாகிய ஒளி அவனில் உதிக்கும்.

தனி ஜெபம் பெலவீனமானது என்றும், தனி ஜெபத்தில் இருதயம் குளிர்ந்து ஒளியற்றிருக்கும் என்றும் சில கிறிஸ்தவர்கள் பராது சொல்வதுண்டு. கொஞ்சமாகவே ஜெபிக்க வேண்டியிருப்பதால் விசுவாசம், சந்தோஷம் ஆகியவை குறைவுபடலாம் என்பது அவர்கள் எண்ணம். இவ்வாறு தனி ஜெபத்தைத் தவிர்க்க முற்படுகின்றனர்.

தேவ பிள்ளையே, இயேசுவின் வாக்குப்படி நீங்கள் அந்தரங்கத்தில் ஜெபிக்கச் செல்லும்போது உங்கள் முதல் எண்ணம், 'பிதா அந்தரங்கத்திலிருக்கிறார், அவர் அங்கு எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்' என்பதாயிருக்க வேண்டும்.

உங்கள் இருதயம் குளிராகவும், ஜெப வாஞ்சையற்றுமிருப்பதால் கட்டாயமாக அன்பின் பிதாவின் சமுகத்தில் வரவேண்டும். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவது போல் அவர் உங்களுக்கு இரங்குவது நிச்சயம்.

அவர் எவ்வளவாக உங்களுக்குத் தர வாஞ்சையோடு இருக்கிறார் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்களை அவருக்கு முன்பாகப் படைத்து அவரது அன்பு, அற்புதம் நிறைந்த முகத்தை நோக்கிப் பாருங்கள். அவரிடம் உங்கள் குளிர்ந்த இருண்ட இருதயத்தின் நிலையைத் தெரிவியுங்கள். பிதாவின் அன்பு இருதயம் உங்களுக்கு வெளிச்சத்தையும் அனலையும் தர முடியும்.

"அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாய் பதிலளிப்பார்", எனவே அந்தரங்க ஜெபம் பதிலளிப்பதில்லை என்பது தவறு என இயேசு காண்பிக்கிறார். அதன் ஆசீர்வாதம் நம் வாழ்வில் நிச்சயமாக வெளிப்படும்.

நமது ஆண்டவர் முடிவற்ற தந்தைக்குரிய தன்மையையும், உத்தமத்தையும் உடையவர். இத்தன்மைகளால் தான் அவர் நம்மை அந்தரங்கத்தில் சந்திக்கிறார். எனவே நாம் குழந்தைகள் போன்ற எளிமையான விசுவாசத்துடனும், நமது ஜெபம் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையுடனும் ஜெபிக்க வேண்டும். "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" எபி.11:6. ஆசீர்வாதத்தைக் கொண்டுவர ஜெபம் உணர்ச்சி நிறைந்த தாயிருக்க வேண்டியதில்லை. தேவன் மேலுள்ள அன்பும் நமது பிதாவின் வல்லமையும் நமது தேவைகளை சந்திக்கக் கூடியவைகள்.

ஸ்பர்ஜன் என்ற ஒரு பக்தன் ஒருமுறை சோர்படைந்து துக்கமாக இருக்கும்போது கர்த்தர் சொன்னார்: என் மகனே, என் கிருபை உனக்குப் போதும், உன் ஊழியத்திற்கு என் கிருபை போதும். உன் முழு ஜீவியத்திற்கும் என் கிருபை போதும். ஒரு மீன் குஞ்சுக்கு கடல் தண்ணீர் எப்படி போதுமானதாக அது நீந்துவதற்கும் சுவாசிப்பதற்கும் தாராளமாக இருக்கிறதோ அதுபோல என் கிருபை உனக்கு போதும்.

பத்திரிகை செய்திகள்

குமரி மாவட்டத்தில்

விமான நிலையத்துக்கான ஆய்வுப் பணிகள் தீவிரம்

நவ.- 17

சாமிதோப்பில் விமான நிலையத்துக்கான ஆய்வுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதனை விஜயகுமார் எம்.பி. நேற்று பார்வையிட்டார்.

ரூ.11 1/2 லட்சம் ஒதுக்கீடு

குமரி மாவட்ட அ.தி.மு.க செயலாளரும், எம்.பியுமான விஜயகுமார், இந்த மாவட்டத்தில் விமான நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசு மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறார். அதைத்தொடர்ந்து குமரி மாவட்டம் சாமிதோப்பில் விமான நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசு முதல் கட்ட சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய. ரூ.11 1/2 லட்சம் ஒதுக்கீடு செய்தது.

இந்த நிலையில் சாமிதோப்பு பகுதியில் உள்ள 850 ஏக்கர் நிலத்தை அளவீடு செய்து கல் நாட்டும் பணிகளும், சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும் பணிகளும் கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது. தனியார் நிலங்கள் பாதிக்காத வகையில் நாகர்கோவிலைச் சேர்ந்த ஒரு தனியார் என்ஜினியரிங் நிறுவனத்தால் செயற் கைக்கோள் உதவியுடன் இப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

ஆய்வு

இந்த பணியை விஜயகுமார் எம்.பி. நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது அவர் நில அளவீடு பணி, எல்கைகளை அடையாளம் காண கல்நாட்டும் பணி மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுப்பணி ஆகிய வற்றை ஆய்வு செய்தார். பின்னர் அங்கு ஆய்வை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவன என்ஜினினீயர்கள், பணியாளர்களிடம் விவரங்களை கேட்டறிந்தார்.

அதன்பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

முதல் தரமான விமான நிலையம்

சாமிதோப்பில் அமைய உள்ள விமான நிலையம் குமரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவாகும். இத்திட்டம் நிறைவேறுவதன் மூலம் கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதன் மூலம் குமரி மாவட்ட சுற்றுலாத்தலங்கள் வளம் பெறும்.

விமான நிலையத்துக்கான முதல் கட்ட சாத்தியக்கூறு ஆய்வுப் பணி இன்னும் 15 நாட்களில் முடிவடையும். பின்னர் இது தொடர்பான அறிக்கை டெல்லியில் உள்ள விமான நிலைய ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்டு அடுத்த கட்ட பணிகள் விரைவில் தொடங்கும். அதற்காக டெல்லியில் இருந்து உயர் அதிகாரிகள் நேரடியாக வந்து பார்வையிட இருக்கிறார்கள். இன்னும் 3 ஆண்டுகளுக்குள், அதாவது 2020-ம் ஆண்டுக்குள் இங்கு விமானம் வந்திறங்கும். இந்த கிரீன் பீல்டு விமான நிலையம் தென்தமிழகத்தில் முதல்தரமான விமான நிலையமாக இருக்கும். அதற்கான அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு விஜயகுமார் எம்.பி கூறினார்.

ரேஷன் அட்டைகளுக்கு பதிலாக

டிசம்பர் 15-ந் தேதிக்குள் அனைவருக்கும் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்படும்

தமிழக அரசு தகவல்

சென்னை நவ.15

ரேஷன் அட்டைகளுக்கு பதிலாக டிசம்பர் 15-ந் தேதிக்குள் அனைவருக்கும் ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டு விடும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பொது வினியோக திட்டத்தை முழு கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஏப்ரல் 1-ந் தேதி முதல் மின்னணு ரேஷன் கார்டு (ஸ்மார்ட் கார்டு) வழங்கப்பட்டு வருகிறது. 1.93 கோடி குடும்ப அட்டைகளில் இதுவரை 1.71 கோடி குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பொது வினியோக திட்டத்தின் மொத்த பயனாளிகள் 6 கோடியே 74 லட்சத்து 74 ஆயிரத்து 478 ஆகும்.

தினத்தந்தி

டிசம்பர் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் - 2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **02-12-2017**
1- வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : IPC பெத்தானி ஜெப வீடு,
வில்லியம் ஆஸ்பத்திரி அருகில்,
மார்த்தாண்டம்

தொடர்பு : பாஸ்டர் கிங்ஸ்லி செல்லன்
மார்த்தாண்டம்
மொபைல் : 94882 74557

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To